கற்பவர்களின் தரப்பு

வணக்கம் வாக்காளர்களால் தேர்ந்தெடுக்கப்பட்டோரே,

பிரெஞ்சு மொழி கற்பவர்களாகிய நாங்கள், வேரற்றவர்கள். இங்கு பிரான்சில், நாங்கள் மீண்டும் குடியேற புதிய நிலத்தைக் கண்டோம். எங்கள் ஒருங்கிணைப்பிற்கு, எங்கள் தொழில் மற்றும் சமூக (மீண்டும்) இணைப்பிற்கு, மொழியைக் கற்பது அவசியம்.

இன்று, "குடியேற்றத்தைக் கட்டுப்படுத்தவும், ஒருங்கிணைப்பை மேம்படுத்தவும்" என்ற சட்டமன்றத் திட்டம், பிரெஞ்சு மொழி கற்பதற்கான தற்போதைய நிலைமைகள் குறித்து எங்களது கருத்துகளை வெளிப்படுத்தவும், வழங்கவும் எங்களை ஊக்குவிக்கிறது.

நாங்கள் பின்வரும் விஷயங்களின் மீது உங்கள் கவனத்தை ஈர்க்க விரும்புகிறோம்:

- **<u>கற்பவர்கள் அனைவருக்கும் பிரெஞ்சு மொழி வகுப்புகள்  கிடைப்பதில்லை.</u>**

  பயிற்சி வழங்கல் தேவைக்கு ஒத்துப்போவதில்லை.

  பயிற்சியில் சேரவும், ஒவ்வொரு மொழித் திறன் லெவல்களின் இடையில் ஓர் குறிப்பிடத்தக்க கால தாமதம் உள்ளது.

  சிறிய நகரங்களில் வகுப்புகள் வழங்கப்படாமல் இருக்கலாம். இது நம்மை சில நேரங்களில் இடம்பெயர அல்லது நீண்ட தூரம் பயணிக்க கட்டாயப்படுத்துகிறது

- **<u>எங்கள் கற்றல் நிலைமைகள் நன்றாக இல்லை:</u>**

  லெவல்களின் அடிப்படையில் குழுக்களின் கலவை எப்போதும் பொருத்தமானதாக இல்லை. பெரும்பாலும் மட்டங்கள் கலக்கப்படுகின்றன.

  குழுவில் உள்ள கற்பவர்களின் எண்ணிக்கை பெரும்பாலும் அதிகமாக உள்ளது. 15 பேர் அல்லது அதற்கு மேற்பட்ட குழுக்களில் கற்பது கடினம்.

- **<u>பயிற்சிகள் எங்களுக்கு பொருந்தாமல் இருக்கலாம்:</u>**
  எங்கள் சூழ்நிலைகள் மிகவும் வேறுபட்டவை.

கற்பவர்களின் தரப்பு

சில கற்பவர்கள் தங்கள் நாட்டில் பல்கலைக்கழகம் சென்றுள்ளனர், மற்ற கற்பவர்கள் பள்ளிக்குச் சென்றதில்லை. எங்களுக்கு ஒரே மாதிரியான கல்வி, ஒரே மாதிரியான மொழித் தேவைகள் மற்றும் ஒரே மாதிரியான நேரமில்லை. OFII வழங்கும் மொழிப் பயிற்சிகள் போதுமானதாக இருக்காது, மேலும் அனைவருக்கும் பொருத்தமான பயிற்சிகள் கிடைக்கவில்லை.

பயிற்சிகளை லெவல்களின் அடிப்படையில் மட்டும் நினைத்தால் போதாது!

பயிற்சிகளின் வகைகள் பன்முகத்தன்மையாக இருக்க வேண்டும்: வாரத்திற்கு 30 மணிநேர பயிற்சிகள், வாரத்திற்கு 6 மணிநேர பயிற்சிகள், தாய்மொழியில் பயிற்சிகள், சிறப்பு நோக்கங்களுக்கான பயிற்சிகள் (எழுத்து அல்லது பேச்சு, பள்ளி, தொழில்...),உரையாடல் வகுப்புகள்...

- **<u>குழந்தை பராமரிப்பு வசதிகள் குறைவாக உள்ளன:</u>**

குழந்தைகள் உள்ள பெற்றோர்கள் கற்றலை நிறுத்திவிட்டு, குழந்தை பள்ளியில் சேரும் வரை காத்திருக்க வேண்டிய கட்டாயம் ஏற்படுகிறது.

- **<u>எங்கள் தொழில்முறை தகுதிகள் அங்கீகரிக்கப்படவில்லை:</u>**

நாங்கள் படித்த தொழிலை ஒருபோதும் செய்ய முடியாது என்பதை அறிந்து கொண்டு பிறகு, எப்படி மொழி கற்றுக்கொள்ள ஆசை வரும்?

- **<u>பயிற்சியாளர்களின் வேலை நிலைமைகள் பெரும்பாலும் கடினமானவை:</u>**

பயிற்சியாளர்களின் வேலை நிலைமைகள் மாணவர்களுக்கும் தாக்கத்தை ஏற்படுத்தும். ஒவ்வொருவரின் இலக்குகள் மற்றும் தேவைகளுக்கு ஏற்ப நம்மை சிறப்பாக ஆதரிப்பதற்கு, போதுமான வசதிகள் இருக்க வேண்டும். பயிற்சியாளர்களின் நிர்வாகப் பணிகள் அதிகம். அவர்கள் பாடத்திட்டத்தை தயாரிப்பதற்கும், மாணவர்களின் கல்வித் தொடர்புக்கு வழிவகுப்பதற்கும் எப்போதும் நேரம் கிடைப்பதில்லை. இந்த நிலைமைகளில், யார் பயிற்சியாளராக ஆக ஆசைப்படுவார்கள்?

- **<u>வாலண்டியர்கள் பெரும்பாலும் தனிமைப்படுத்தப்படுகிறார்கள்:</u>**

வரவேற்பு மற்றும் கற்றலின் ஒரு பெரிய பகுதி வாலண்டியர்களின் தோள்களில் உள்ளது. அவர்கள் எப்போதும் இதற்கு பயிற்சி பெற்றவர்கள் அல்ல. வாலண்டியர்களுக்கு முறையான

பயிற்சி வழங்கப்பட வேண்டும். அவர்களின் பணி மற்றும் அர்ப்பணிப்பை நாங்கள் பாராட்டுகிறோம், ஆனால் இது ஒரு பயற்சியாளரால் வழங்கப்படும் பயிற்சியுடன் கூடுதலாக இருக்க வேண்டும். வாலண்டியர்கள் மொழி வகுப்புகள் மட்டுமல்ல மற்ற செயல்பாடுகளுக்கும் பொறுப்பாக இருக்கலாம்: வெளியே செல்லுதல், கலாச்சார அல்லது விளையாட்டு நடவடிக்கைகள் போன்றவை. இது வேறுபட்ட எதிர்பார்ப்புகளுக்கும், கற்றலின் பல்வேறு வழிகளுக்கும் பதிலளிக்க உதவும்.

நாங்கள் பிரான்சில் எங்கள் வாழ்க்கையை மீண்டும் கட்டியெழுப்பவும், சமூகத்தில் பங்கேற்கவும், பிரெஞ்சு மொழியைக் கற்க மிகவும் உற்சாகமாக உள்ளோம். இருப்பினும், சிலர் நம்முடைய பிரெஞ்சு மொழி கற்றலில் பல தடைகளைச் சந்திப்பதால், விரக்தியடைகின்றனர்.

**பிரெஞ்சு மொழியைக் கற்கும் நாங்கள் பின்வரும்வற்றை கோருகிறோம்:**

- **பிரான்ஸ் முழுவதும், தொழில்முறை ஆசிரியர்களால் வழங்கப்படும் பிரெஞ்சு மொழி பயிற்சிகளுக்கு அணுகல்**
- **எங்கள் தேவைகளுக்கு ஏற்ப வேறுபட்ட பயிற்சி வாய்ப்புகள்**
- **தொழில்முறை பயிற்சி அல்லது பணிபுரியும் நபர்களுக்கு வழங்கப்படுவது போலவே, குழந்தை பராமரிப்பு மையங்களுக்கு முன்னுரிமை அணுகல்**
- **எங்கள் டிப்ளோமாக்களின் அங்கீகாரம் மற்றும் மதிப்பு**

இந்தத் தரப்பு பிரான்சில் பிரெஞ்சு மொழியைக் கற்கும் நபர்களால் விவாதிக்கப்பட்டு எழுதப்பட்டது. இது "பிரெஞ்சு அனைவருக்கும்" குழுவின் ஆராய்ச்சி-செயல்பாட்டில் பங்கேற்பாளர்களால் உருவாக்கப்பட்டது. இந்தத் தரப்பு கல்கொங்கோவின் லிங்கோல்ஷெமில் உள்ள அலபாட்ரஸ் சமூக மற்றும் கலாச்சார மையத்தின் குல்டென் போயசி, நியூரோட்டில் உள்ள கோராப்லிஸ் சங்கத்தின் சாலே இஸ்ஸா மற்றும் டூர்ஸில் உள்ள பிரான்கோ-சூடானிய கலாச்சார மற்றும் சகவாழ்வு சங்கத்தின் ராதவன் இட்ரிஸ் ஆகியோரால் தொடங்கப்பட்டது. இந்த மூவரும் தாங்கள் அறிந்தவர்களின் மத்தியில் உள்ள மாணவர்களிடம் அனுபவங்கள் மற்றும் பரிமாற்றங்களைப் பெறுவதன் மூலம் இந்தத் தரப்பை வளர்த்தனர்.